முன்வருமானால், அந்த வாரியம் அமைக்கலாம். உள்ளாட்சித் துறை சார்பாகவே அந்த வாரியத்தை அமைப்பதாக இருந்தோம். டி.ஆர்.டி. அவர்களைத் தலைவராக்கி அந்த வாரியத்தை அமைக்கலாம் என்று ஒரு குறிப்பு இருந்தது. ஆனால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைக்கவில்லை.

House Rent Allowance to the Government School Teachers of Ambattur.

*166. Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have sanctioned House Rent Allowance to the Government School Teachers of Ambattur Centre belonging to Villiwakkam Range from 1st April 1967 ;

(*b*) if so, whether the Aided School teachers were also sanctioned the same ; and

(*c*) if not, the reasons therefor ?

அம்பத்தூரில் இருக்கும் அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வில்லிவாக்கம் சரகத்தைச் சேர்ந்த அம்பத்தூரில் இருக்கும் அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி 1-4-1967 முதல் கொடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்பட்டதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

Pay Scales among Last Grade Servants of Aided and Government Colleges.

*167. Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the pay scales recommended by the Second Tamil Nadu Pay Commission have been applied to all the Last Grade Servants of the Aided Colleges ;

1975 March 22]

(*b*) whether there is any disparity of pay scales among the Last Grade Servants in the Aided and Government Colleges ; and

(*c*) if so, whether there is any proposal to remove the same ?

மானியம் பெறும் கல்லூரிகளிலும் அரசுக் கல்லூரிகளிலும் பணி யாற்றும் கடைநிலை ஊழியர்களிடையே சம்பள வீதங்கள்.

திரு.க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழு பரிவுரை செய்துள்ள சம்பள வீதங்கள், மானியம் பெறும் கல்லூரிகளில் பணி யாற்றும் கடைநிலை ஊழியர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு செய் யப்பட்டுள்ளதா?

(இ) மானியம் பெறும் கல்லூரிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களிடையே சம்பள வீதங்களில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா?

(உ) ஆமெனில், இதை நீக்குவதற்கு ஏதேனும் செயற்குறிப்புகள் உள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4–20)

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, மிக நீண்ட காலமாக இந்த மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் கடைநிலை ஊழியர் கள் தங்களுடைய சம்பள விகிதங்களை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்றும் அதுவும் முக்கியமாக கல்லூரிகளிலே இருக்கக் கூடியவர்களுக்கு "பென் சன்", "கிராஜுவட்டி" போன்றவை வேண்டுமென்றும் கேட்டு வருகிறார்கள். எனவே விரைந்து அரசு முடிவை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே தரப்படுகின்ற அதே விகிதத்தைத்தான் இவர் களுக்கும் தர வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகின்றோம். அப்படி பல இடங்களில் கொடுத்து வருகிறார்கள். சில இடங் களில் கொடுத்து வரப்படவில்லை என்பதால், பல்கலைக் கழகத்தின் மூல மாக அப்படி கொடுக்கும்படி அந்தந்தக் கல்லூரிகளை வற்புறுத்தும்படி யாக நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.